www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

வகுப்பு :10 | தேர்வு எண் | 1 0 1 6 2

# காலாண்டுப் பொதுத் தேர்வு - 2024-25

நேரம் : 3.00 மணி] **சமூக அறிவியல்** [மொத்த மதிப்பெண்கள் : 100

## பகுதி - I

I. சரியான விடையினை தேர்ந்தெடுத்து எழுதுக. 14x1=14

1. முதல் உலகப்போரின் இறுதியில் நிலைகுலைந்து போன மூன்று பெரும் பேரரசுகள் யாவை?
   அ) ஜெர்மனி, ஆஸ்திரிய-ஹங்கேரி, உதுமானியர் ஆ) ஜெர்மனி, ஆஸ்திரிய-ஹங்கேரி, ரஷ்யா
   இ) ஸ்பெயின், போர்ச்சுகல், இத்தாலி ஈ) ஜெர்மனி, ஆஸ்திரிய-ஹங்கேரி, இத்தாலி
2. உலகத்தின் எந்த பகுதியில் டாலர் அரசியல் ஏகாதிபத்தியத்தை விரும்பவில்லை?
   அ) ஐரோப்பா ஆ) லத்தீன் அமெரிக்கா இ) இந்தியா ஈ) சீனா
3. அமெரிக்கா தனது முதல் அணுகுண்டை எங்கே வீசியது?
   அ) கவாசாகி ஆ) டோக்கியோ இ) ஹிரோஷிமா ஈ) நாகசாகி
4. எந்த ஆண்டு வார்சா ஒப்பந்தம் கலைக்கப்பட்டது?
   அ) 1979 ஆ) 1989 இ) 1990 ஈ) 1991
5. சத்யார்த்தபிரகாஷ் எனும் நூலின் ஆசிரியர் யார்?
   அ) தயானந்த சரஸ்வதி ஆ) அயோத்தி தாசர் இ) அன்னிபெசன்ட் ஈ) நாராயண குரு
6. பழவேற்காடு ஏரி ---------- மாநிலங்களுக்கிடையே அமைந்துள்ளது.
   அ) மேற்கு வங்காளம் மற்றும் ஒடிசா ஆ) கர்நாடகா மற்றும் கேரளா
   இ) ஒடிசா மற்றும் ஆந்திரப்பிரதேசம் ஈ) தமிழ்நாடு மற்றும் ஆந்திரப்பிரதேசம்
7. மேற்கத்திய இடையூறுகளால் மழைப்பொழிவைப் பெறும் பகுதி
   அ) தமிழ்நாடு ஆ) கேரளா இ) பஞ்சாப் ஈ) மத்தியப்பிரதேசம்
8. இந்தியாவில் தங்க இழைப்பயிர் என அழைக்கப்படுவது ---------
   அ) பருத்தி ஆ) கோதுமை இ) சணல் ஈ) புகையிலை
9. மிக அதிகமாக கிடைக்கக்கூடிய ஆற்றல் வளம்?
   அ) உயிரிய சக்தி ஆ) சூரியன் இ) நிலக்கரி ஈ) எண்ணெய்
10. இந்தியாவின் முக்கிய இறக்குமதி பொருள்
    அ) சிமெண்ட் ஆ) ஆபரணங்கள் இ) தேயிலை ஈ) பெட்ரோலியம்
11. பின்வருவனவற்றுள் எந்த உரிமை டாக்டர் அம்பேத்கர் அவர்களால் இந்திய அரசியலமைப்பின் இதயம் மற்றும் ஆன்மா என விவரிக்கப்பட்டது?
    அ) சமய உரிமை ஆ) சமத்துவ உரிமை
    இ) அரசியலமைப்புக்குட்பட்டு தீர்வுகாணும் உரிமை ஈ) சொத்துரிமை
12. மக்களவை தேர்தலில் போட்டியிட தேவையான குறைந்தபட்ச வயது
    அ) 18 வயது ஆ) 21 வயது இ) 25 வயது ஈ) 30 வயது
13. உலக வர்த்தக அமைப்பின் (WTO) தலைவர் யார்?
    அ) அமைச்சரவை ஆ) தலைமை இயக்குநர்
    இ) துணை தலைமை இயக்குநர் ஈ) இவற்றில் எதுவுமில்லை
14. உலகளாவிய பொது வழங்கல் முறையை ஏற்றுக்கொண்ட ஒரே மாநிலம் -------
    அ) கேரளா ஆ) ஆந்திரப்பிரதேசம் இ) தமிழ்நாடு ஈ) கர்நாடகா

## பகுதி - II

II. **ஏதேனும் 10 வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்கவும். கேள்வி எண். 28 கட்டாயம் விடையளிக்க வேண்டும்.** 10x2=20

15. மூவர் கூட்டு நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
16. முசோலினியின் ரோமாபுரி நோக்கிய அணிவகுப்பின் விளைவுகள் யாவை?
17. பிரெட்டன் உட்ஸ் இரட்டையர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
18. மார்ஷல் திட்டம் என்றால் என்ன?
19. இராமலிங்க அடிகளின் சீர்திருத்தங்கள் குறித்து சிறுகுறிப்பு வரைக.
20. இந்தியாவின் அண்டை நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
21. இந்தியாவின் காலநிலையை பாதிக்கும் காரணிகளை பட்டியலிடுக.
22. கரிசல் மண்ணின் ஏதேனும் இரண்டு பண்புகளை எழுதுக.
23. மாங்கனீசின் பயன்களைக் குறிப்பிடுக.



Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

24. பன்னாட்டு வணிகம் – வரையறு.
25. இந்தியாவின் செம்மொழிகள் யாவை?
26. நிதி மசோதா குறிப்பு வரைக.
27. தலா வருமானம் என்றால் என்ன?
28. FAO வின்படி உணவு பாதுகாப்பை வரையறு.

பகுதி – III

**III. எவையேனும் பத்து வினாக்களுக்கு விரிவான விடையளிக்கவும்.**
**கேள்வி எண் 42க்கு கட்டாய வினா.** **10x5=50**

**29. கோடிட்ட இடங்களை நிரப்புக.**
i) ------- ஆம் ஆண்டில் லோக்கர்னோ உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டது.
ii) இத்தாலி, ஜெர்மனி, ஜப்பான் ஆகியவற்றிற்குக்கிடையேயான ஒப்பந்தம் ------ என அழைக்கப்பட்டது.
iii) இந்தியாவின் முதல் மக்கள் தொகை கணக்கெடுப்பு ------ ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது.
iv) ------- அலுவல் வழியில் மாநிலங்களவையின் தலைவர் ஆவார்.
v) இந்தியாவில் ------- துறை முதன்மை துறையாகும்.

30. பன்னாட்டுச் சங்கத்தின் பணிகளை மதிப்பிடுக.
31. இரண்டாம் உலகபோரின் விளைவுகளை ஆய்வு செய்க.
32. அ) **வேறுபடுத்துக.**
i) மேற்கு கடற்கரைச் சமவெளி மற்றும் கிழக்கு கடற்கரை சமவெளி
ii) உலோகம் மற்றும் அலோக கனிமங்கள்

ஆ) **காரணம் கூறுக.**
i) வேளாண்மை இந்தியாவின் முதுகெலும்பு

33. சீனாவை ஒரு பொதுவுடைமை நாடாக்க மா சே துங்கின் பங்களிப்பை அளவிடு.
34. இமயமலையின் உட்பிரிவுகளையும் அதன் முக்கியத்துவம் பற்றி விவரி.
35. தென்மேற்கு பருவக் காற்று குறித்து எழுதுக.
36. இந்தியாவில் உள்ள பருத்தி நெசவாலைகளில் பரவல் பற்றி எழுதுக.
37. முதலமைச்சரின் அதிகாரங்களை மற்றும் பணிகளை விவரி.
38. இந்திய அரசியலமைப்பின் சிறப்புக் கூறுகளை விளக்குக.
39. உலகமயமாக்கலின் சவால்களை எழுதுக.
40. GDP ஐ கணக்கிடும் முறைகள் யாவை? அவைகளை விவரி.

குறிப்பு: பார்வையற்ற மாணவர்கள் காலக்கோடு மற்றும் வரைபடத்தில் முறையே நிகழ்வுகளையும் இடங்களையும் குறிப்பிட்டுக் காட்டுவதற்குப் பதிலாக அவற்றை பற்றி குறிப்புகள் மட்டும் எழுத வேண்டும்.

41. 1920 முதல் 1950 வரையிலான ஐந்து முக்கிய உலக நிகழ்வுகளை காலக்கோட்டில் எழுதவும்.
42. **<u>உலக வரைபடத்தில்</u> கீழ்கண்ட இடங்களை குறிக்கவும்.**
**(i)** ஜப்பான் **(ii)** மாஸ்கோ **(iii)** ஹவாய் தீவு **(iv)** இத்தாலி **(V)** துருக்கி

பகுதி – IV

**IV. பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.** **2x8=16**

43. அ) முதல் உலகப்போருக்கான முக்கியக் காரணங்களை விவாதி.

**(அல்லது)**

ஆ) இந்திய மண் வகைகள் ஏதேனும் ஐந்தினைக் குறிப்பிட்டு, மண்ணின் பண்புகள் மற்றும் பரவல் பற்றி விவரி.
குறிப்பு: பார்வையற்ற மாணவர்கள் வரைபட தொடர்புடைய வினாக்களுக்கு குறிப்புகள் மட்டும் எழுதவும்.


44. **அ) கொடுக்கப்பட்டுள்ள <u>இந்திய வரைபடத்தில்</u> கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்.**
i) மேற்கு தொடர்ச்சிமலைகள் ii) கங்கை ஆறு
iii) தக்காண பீடபூமி iv) தார் பாலைவனம்
v) வடகிழக்கு பருவக்காற்று vi) தேயிலை விளையும் பகுதிகள்
vii) தூத்துக்குடி viii) எவரெஸ்ட்

**(அல்லது)**


**ஆ) கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்.**
i) கரிசல் மண் ii) மன்னார் வளைகுடா
iii) மேட்டூர் அணை iv) அகத்தியர் மலை
v) காவேரி டெல்டா vi) இரும்பு எஃகு தொழிலகங்கள் (ஏதேனும் ஒன்று)
vii) பாக்நீர் சந்தி viii) இந்தியாவில் அதிகம் கல்வியறிவு பெற்ற மாநிலம்



Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com




Scanned with CamScanner



Scanned with CamScanner